இந்திய மாணவர்களின் வேலைத் திறனை அதிகரிக்கவும், திறன் மேம்பாட்டை உறுதிப்படுத்தவும்,

# தொழிற்கல்வியை வளர்த்தெடுக்கவும் ஒன்றிய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஆக .3–

திராவிடமுன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 29 ஜூலை 2026 அன்று மாநிலங்களவையில் இந்திய மாணவர்களின் வேலைத் திறனை அதிகரிக்கவும், திறன் மேம்பாட்டை உறுதிப் படுத்தவும், தொழிற் கல்வியை வளர்த்தெடுக்கவும் ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் தேவையான சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப் படுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் உயர்கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தார் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் உயர் கல்வித் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு:–

அனைத்து பாடப்பிரிவுகளின் கீழ் மாணவர்கள் போதிய அறிவுத் திறனை பெருக்கும் வகையிலும், தொழிற்கல்வியை பள்ளிக் கல்வியின் மூலம் பெற்றிடவும், தேசிய பாடத்திட்டங்களின்படி, தேசிய கல்விக் கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும், திறன் மேம்பாட்டை உறுதி செய்யவும், தொழில் பழகுநர் முறைகளை மேம்படுத்தவும் கல்லூரிப் படிப்பின் போது தொழிற் சார்ந்த கல்வியில் ஈடுபாட்டினை ஏற்படுத்தவும் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியுடன் அரசு பல்வேறு திட்டங்களை முனைந்து வருகிறது என்றும், மும்பாய், கான்பூர், சென்னை மற்றும் கொல்கத்தாவில் அமைந்துள்ள தேசிய தொழில் பழகுநர் ஆணையத்தின் உதவியுடன் 17 இலட்சத்திற்கும் அதிகமான தொழிற் கல்வி மாணவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஒன்றிய அரசின் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், தொழிற் கல்வி பழகுநர் திட்டத்திற்கென இதுவரை 2892 கோடிகள் கல்வி உதவித் தொகை செலவிடப்பட்டுள்ளது என்றும், உயர் கல்வி நிறுவனங்களுடன் இதுவரை 459 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும், அனைத்து இந்திய தொழிற் கல்வி குழுமத்தின் உதவியுடன் பாடத் திட்டங்கள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன என்றும், திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்பகளின் எண்ணிக்கை கல்லூரிகள் அதிகரித்துள்ளன என்றும் பல்கலைக் கழக மானிய் குழுவின் உதவியுடன் திறன் மேம்பாட்டு கல்வி அளிக்கப்பட்டு வருகிறது என்றும், ஒன்றிய அரசின் உயர்கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தார் அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க

# எரிசக்தி விரிவாக்கத்தின் முன்னேற்றத்தை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா?

## மக்களவையில் பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி கேள்வி!

புதுடெல்லி, ஆக 3–

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி விரிவாக்கத்தின் முன்னேற்றத்தை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா?அவ்வாறாயின், கடந்த ஐந்து ஆண்டுகளில் (ஆண்டு மற்றும் மாநில வாரியாக) அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் பொது மற்றும்தனியார் துறைநிறுவனங்களின் பங்களிப்பு உள்ளிட்ட 'தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின்' (NATIONAL GREEN HYDROGEN MISSION) அமலாக்கம் குறித்த விவரங்கள் என்ன?

நிலையான மற்றும் சமூக நீதியாக சமமான எரிசக்தி மாற்றத்தை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களை அரசு அறிமுகப்படுத்தியுள்ளதா? அவ்வாறாயின் அதன் விவரங்கள் என்ன?, இல்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன? என்று பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பினார்.

இணை அமைச்சர் பதில் கூறிய தாவது : 30.06.2026 நிலவரப்படி, தமிழ்நாடு மாநிலத்தில் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 29.77 ஜிகாவாட் (GW) அளவை எட்டியுள்ளது. இந்தியாவை பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் வழித்தோன்றல் பொருட்களின் உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்கான ஒரு உலகளாவிய மையமாக மாற்றும் நோக்கத்துடன், இந்திய அரசு 'தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தை' (NATIONAL GREEN HYDROGEN MISSION) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்த விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.



புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், நிலையான மற்றும் சமூக ரீதியாக சமமான எரிசக்தி மாற்றத்திற்கான கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் திட்டக்கட்டமைப்புகளில் அதற்கான கோட்பாடுகளை ஒருங்கிணைத்துள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள், பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் விதிமுறைகள் மற்றும் நிலைத்தன்மை சார்ந்த அம்சங்களுக்கு இணங்க செயல்படுத்தப்படுகின்றன. பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல், எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துதல், எரிசக்தி ஆதாரங்களின் கலவையை விரிவுபடுத்துதல் மற்றும் 2070க்குள் நிகரபூஜ்ஜிய (NETZERO) உமிழ்வை அடைதல் மற்றும் புதைபடிவ எரிபொருள் அல்லாத ஆதாரங்களிலிருந்து 500 ஜிகாவாட் (GW) மின் உற்பத்தித்திறனை எட்டுதல் ஆகியவற்றுக்கான இந்தியாவின் உறுதிப்பாடுகள் மற்றும் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு (NDC) இலக்குகளுக்கு ஆதரவளித்தல் ஆகியவை இத்திட்டங்களின் நோக்கங்களாகும்.

'பிஎம் சூர்யா கர் முஃப்த் பிஜ்லி யோஜனா' (PM SURYA GHAR MUFT BIJLI YOJANA) திட்டமானது, வீட்டு உரிமையாளர்கள் தங்கள் சொந்த மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ளும் வகையில், வீட்டின் கூரையில் சூரிய மின்சக்தி அமைப்புகளை (RTS) நிறுவ மத்திய நிதியுதவி (CFA) வழங்குவதன் மூலம் சூரிய ஆற்றல் பயன்பாட்டை அனைவருக்கும் கிடைக்கச் செய்கிறது. இத்திட்டத்தின் கீழ், உள்ளூர் மின் விநியோக நிறுவனங்கள் (DISCOMs) மற்றும் மாநிலங்கள் பயன்பெறும் வகையில், RESCO மற்றும் பயன்பாட்டு நிறுவனம் சார்ந்த ஒருங்கிணைப்பு (ULA) மாதிரிகளையும் இத்திட்டத்தின் கீழ் அமைச்சகம் இணைத்துள்ளது. முக்கியமாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு, RTS மேம்பாட்டிற்கு அரசாங்கங்கள்/மாநிலத்தால் நியமிக்கப்பட்ட அமைப்புகள் ஆதரவளிக்கின்றன.

பிரதம மந்திரி கிசான் ஊர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தன் மகாபியான் (PMKUSUM) திட்டமானது, விவசாயிகளின் தரிசு/பயிரிட முடியாத நிலங்களில், தனித்த சூரிய பம்புகளை நிறுவுதல், ஏற்கனவே உள்ள மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட விவசாய பம்புகளை மின்னூட்ட நிலை சூரியமயமாக்கல் உட்பட சூரிய மயமாக்குதல் மற்றும் 2 மெகாவாட் வரையிலான சூரிய மின் நிலையங்களை அமைத்தல் ஆகியவற்றின் மூலம் அவர்களை மேம்படுத்துகிறது.

பிரதம மந்திரி ஜனஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM JANMAN) மற்றும் தர்த்தி ஆபா ஜனஜாதிய கிராம் உத்கர்ஷ் அபியான் (DA JGUA) ஆகியவற்றின் கீழ், பழங்குடியினர் மற்றும் குறிப்பாக நலிவடைந்த பழங்குடியினர் (PVTG) குடியிருப்புகள்/கிராமங்களுக்கான புதிய சூரிய சக்தி திட்டத்தை அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மின் கட்டமைப்பு இணைப்பு தொழில்நுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சாத்தியமில்லாத இடங்களில், மின் கட்டமைப்புடன் தொடர்பில்லாத சூரிய அமைப்புகள் மூலம், PVTG மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள்/கிராமங்களில் மின்வசதி இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல், PVTG பகுதிகளில் உள்ள பல்நோக்கு மையங்களை (MPCs) சூரிய சக்தியாக்குதல், மற்றும் அடையாளம் காணப்பட்ட பழங்குடியினர் குடியிருப்புகள்/கிராமங்களில் உள்ள பொது நிறுவனங்களை சூரிய சக்தியாக்குதல் ஆகியவை அடங்கும் என்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மின்சாரத் துறைக்கான இணையமைச்சர் ஸ்ரீபாத் யெஸ்ஸோ நாயக் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த பட்டுக்கோட்டை ஒன்றியத்தின் முன்னாள் அவைத் தலைவர்

# கழக செயல் மறவர் எஸ்.வேதையன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.3–

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

ஒருங்கிணைந்த பட்டுக்கோட்டை ஒன்றியக் கழகத்தின் முன்னாள் அவைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றிய பட்டுக்கோட்டை வட்டம் ஒதியடிக்காடு கழக செயல் மறவர் எஸ்.வேதைய்யன் (வயது 90) அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (1.8.2026) மறைவெய்தினார் என்பதை அறிந்து மிகவும் வருந்தினேன்.

அவசரகால நிலைக்கு முன்பு ஒரு வழக்கின் காரணமாக திருச்சி சிறையில் கைதியாக இருந்த அந்த காலகட்டத்தில் திருச்சி சிறைக்கு சென்னை சிறைச்சாலையிலிருந்து இடம் மாறுதல் பெற்று வந்தவர்கள், சென்னை சிறைச் சாலையில் நான் உள்ளிட்ட கழக மறவர்கள் காவல் துறையால் தாக்கப்பட்ட சம்பவத்தை கேள்விப்பட்டு அதை முழுமையாக கேட்டு தெரிந்து கொண்ட இவர், அவசர நிலை நெருக்கடியில் காவல்துறை மற்றும் சிறைக் காவலர்கள் அத்துமீறல்களை விசாரிக்கப் போடப்பட்ட 'இஸ்மாயில் கமிஷன்' முன்பு தானே முன்வந்து திருச்சி சிறையில் இருந்து ஒரு கைதி என்கிற நிலையிலும் காதால் கேட்ட சிறைக் கொடுமைகளை துணிச்சலாக சென்னை சென்று சாட்சியம் அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கழக செயல் வீரர் எஸ்.வேதைய்யன் தஞ்சை மண்டலக் கழகத்தின் தளகர்த்தர்களாக விளங்கிய மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோரோடு இணைந்து கழகப் பணியாற்றியவர். அன்னாரின் மறைவு பட்டுக்கோட்டை பகுதிக் கழக தோழர்களுக்கு மாபெரும் இழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தென்காசி மாவட்டம் – குற்றாலத்தில் நீர்வரத்து

# சீரான நிலையில் மெயின் அருவி, ஐந்தருவியில் குளிக்க அனுமதி!

*தென்காசி, ஆக.3-*

*தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நீர்வரத்து இன்று சீரான நிலையில் மெயின் அருவி, ஐந்தருவியில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. குற்றால அருவிகளில் கடந்த சில வாரங்களாக நீர்வரத்து மிகக்குறைந்த அளவிலேயே இருந்தது. இதற்கிடையே, மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் கடந்த 30ந்தேதி அருவிகளில் நீர்வரத்து அதிகரித்ததை தொடர்ந்து, சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து அன்று மாலையில் நீர்வரத்து சீரானதை தொடர்ந்து குளிக்க அனுமதி வழங்கப்பட்டது.*

*இதனையடுத்து, குற்றாலம் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் மழை பெய்தது. இதனால் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் தண்ணீர் வரத்து அதிகரித்ததை யடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க மீண்டும் தடை விதிக்கப்பட்டது.*

*இந்த நிலையில், தொடர் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் குளிக்க 2வது நாளாக நேற்றும் தடை விதிக்கப்பட்டது. இதனால், விடுமுறை நாளில் ஆவலுடன் நீராட வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.*

*இந்த நிலையில், குற்றாலத்தில் நீர்வரத்து இன்று சீரானது. இதனால், 2 நாட்கள் தடைக்கு பின்னர் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. இதன்படி, தென்காசி மாவட்டம் குற்றாலம் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் குளிப்பதற்கு சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இதனால், சுற்றுலாவாசிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*

# தகுதி குறித்துப் பேசும் தற்குறிகளே...

# தங்கள் தகுதிகளைக் கூறத் தயாரா?

"நாடு முழுவதும் நடைபெறும் பெண்களுக்கு எதிரானபாலியல் வன்புணர்ச்சி,போதைப்பொருள் விற்பனை பற்றியோ, கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு எனச் சட்ட ஒழுங்குக் சீர்கேடுகள் பற்றியோ, மின் வெட்டால் வீடுகள், தொழிற்சாலைகள், கல்விக்கூடங்கள் என இருண்டு போனதைப் பற்றியோ,தட்டுப்பாடு ஏற்பட்டு வரும்அரிசி, பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் விலைவாசி ஏற்றத்தைப் பற்றியோ, காவிரி நீர் பிரச்சினை, மேகதாது அணை, முல்லைப் பெரியாறு, பாலாறு அணை போன்ற நதிநீர் பிரச்சினைகளால் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருவதைப் பற்றியோ, மூடப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை இன்றித் தவிக்கும் இலட்சக்கணக்கானதொழிலாளர்கள் பற்றியோ ஜோசப்விஜய் அரசுக்குஅக்கறையில்லை.

ஒன்றிய அரசால் நீட் தேர்வு ஒழிப்பு குறித்துப் பேசாதது; மதுரை, கோவை நகர்களுக்கு மெட்ரோ இரயில் திட்டத்திற்குநிதி ஒதுக்காதது; தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் கடைசி இடத்துக்குத் தள்ளி இழிவுப் படுத்தியது போன்ற மாநில உரிமைகள் பற்றியோ கிஞ்சித்தும் கவலைப்படாத தற்குறி அமைச்சர்கள்; தான்தோன்றித்தனமாகக் கடுமையான வார்த்தைகளால் எதிர்க்கட்சிகளையும், அதன் தலைவர்களையும் பற்றித் தேவையற்ற விமர்சனம் செய்து வருகிறார்கள்.

*"உங்கள் குடும்பத்தில் கடைசி முதல்வர் நீங்கதான் மு.க. ஸ்டாலின்?இதுதான் கடைசி; கிளம்புங்க இலண்டன் போய்க் கொள்ளையடித்த பணத்துடன் செட்டில் ஆகுங்க; குடும்பத்துடன் கிளம்புங்க!" என்று நாவடக்கம் இல்லாமல் ஆதவ் அர்ஜுனா என்ற "மக்கள் விரோதகோயபல்ஸ்" ஆபாச வார்த்தைகளால் மாமல்லபுரம் கூட்டத்தில் பேசினார். மல்லாந்து படுத்துக்கொண்டு எச்சில் துப்பியுள்ளார். சுரண்டல் இலாட்டரி பரிசுச்சீட்டுக் கொள்கைக் கும்பல் எனவும், போதைப் பொருள் கடத்தலில் சிக்கியுள்ள குடும்பத்தின் உறவினர் எனவும், வெகுஜன விரோதியாகப் மக்களால் பேசப்படும்ஒருவரானவர்; தேர்தல் புழுதிப் புயற் காற்றில் கோட்டைக் கொத்தளத்தில் ஒட்டிக்கொண்டுஅமைச்சரானவர்; அரசியல் அரிப்பெடுத்தவராய்க் கொத்தளக் கொழுப்பேறிப் பேசி வருகிறார்!.

*அதைப்போல, அரசியல் வெள்ளத்தில் மலக்குப்பையாய் மிதந்து பல கரைகளைக் கண்ட தூய அரசியல்வாதி நிர்மல் குமார் என்னும் அடிக்கடி நினைவிழக்கும் மந்திரி ஒருவர்; தி.மு.க. தலைவர் தளபதி பற்றியும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பற்றியும் பேசித் துர்நாற்ற வார்த்தைகளால் வாந்தி எடுத்திருக்கிறார்.

"நீட்" தேர்வு விவகாரத்தில் தி.மு.க.வினர் நடத்திய போராட்டத்தில் பணம் கொடுத்து ஆட்களை அழைத்து வந்து குழப்பம் விளைவிக்க முயன்றனர்; த.வெ.க.வினர் கொடி, பேனரின்றிப் பங்கேற்றனர். ஆனால், தி.மு.க.வினர் ரூபாய் 200, 300 கொடுத்து ஆட்களை அழைத்து வந்து அங்கே குழப்பத்தை ஏற்படுத்தினர்" என்று தற்குறித்தனத்தோடு தாண்டவம் ஆடி இருக்கிறார். அத்துடன், "GenZஎன்றால், என்னவென்று உதயநிதி ஸ்டாலினுக்குத் தெரியாது; இனியாவது அவர், "கோமாளித்தனமான" வேலைகளை விட்டுவிட்டு, சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்" எனத் தமிழ்நாட்டுத் துக்ளக் சாம்ராஜ்யத் தலைமை அறிவாளிகளில் ஒரு வரான நிர்மல் குமார் உளறிக் கொட்டியிருக்கிறார்.மேலும், அவர் தகுதி பற்றிப் பேசிச் தன் தரத்தை இழந்திருக்கிறார். அவரே தனது மார்பில் மல்லாந்து படுத்துக் கொண்டு, தனக்குத் தானே எச்சில் துப்பி கொண்டு இருக்கிறார்.

*ஆர்.எஸ்.எஸ். இன் கைக் கூலிகளாக விளங்கும் சிலர் த.வெ.க.வில் ஐக்கியமாகி, ஆடிக் காற்றில் பறந்த எச்சில் இலைகள் போல்,அமைச்சர்களாகி உள்ளனர். அவர்கள் கோட்டையில் அமர்ந்து "பொண்ணு ஊருக்குப் புதிது" என்பது போலப் புலம்பல் கச்சேரி நடத்திக் கொண்டு இருக்கின்றனர். தொகுதியில் நின்றவர் யார் வேட்பாளர்? அல்லது தொகுதி வாக்காளர் பெரு மக்கள் எவர்? என்று இருதரப்புக்குமே தெரியாமல் ஒரு மாய வலையில் கிடைத்த வெற்றியைப் பெற்று வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சியி லிருந்தும் வேலி தாண்டிய வெள்ளாடுகளாக மாறிக் கடைசியில் தற்குறி கட்சியில் சேர்ந்து கரைந்து, அட்டைப் புலிக்கு ரெட்டை வாலாக ஆடிக் கொண்டிருக்கிறார்கள்.



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக்குழுத் தலைவர்

அமைச்சரவையில் பொறுப்பேற்று இருக்கும் நிர்மல் குமார்கள் இப்பொழுது புலம்பல் கச்சேரி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியை நடத்துவது, கட்சியின் தலைவர் முதல்வர்ஜோசப் விஜய்யா? அல்லது ஆதவ் அர்ஜுனா? அல்லது நிர்மல் குமார் போன்ற நிழல் தோற்றங்களா? என்பது குறித்து மக்கள் மத்தியில், அவ்வப்போது அவர்கள் தரும் பேட்டி, செய்திகள் மூலம் அய்யப்பாடுஎழ ஆரம்பித்துஇருக்கிறது!

*தகுதியைப் பற்றிப் பேசும் இவர்; தான் நின்ற திருப்பரங்குன்றம் தொகுதியில் தாக்கல் செய்த வேட்பு மனுவில் கூறியிருக்கிற தனது கல்வித் தகுதி போன்றவை உண்மைதானா?என்பதைச் சொல்லத் தலைப்பட வேண்டும். காரணம், அச்சு, காட்சிஊடகங்களில் அவரது சுயசரிதை பற்றிய சர்ச்சைகள் அவ்வப்போது கேள்விகளாக எழுந்து வருகின்றன . எனவே, இன்று அமைச்சராகி இருக்கும் அவரைப்பற்றிய சாதாரண குடிமக்கள் எழுப்பும் வினாக்களுக்கு உரிய விடைகளை தர வேண்டிய பொறுப்பும், மரியாதையும், கடமையும் அவருக்கு உண்டு. ஆதாயப் பதவி (Office of profit) எனும் அமைச்சராகிமக்களுடைய வரிப்பணத்தில் பொறுப்பில் இருந்து வருகிறார் . வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அவரது கல்வித் தகுதி பற்றித் தந்திருக்கிற தகவல்கள் குறித்த விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில்; தேர்தல் ஆணையத்திற்குத் தந்திருக்கிற தகுதி பற்றி உண்மையான விவரம் என்ன என்று ஆதாரங்களைக் காட்டிப் பொதுவெளியில் சொல்ல முன்வர வேண்டும்* .

த.வெ.க. கட்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்கள் கல்வித் தகுதியைத் தவறான முறையில் தேர்தல் உறுதிமொழி ப் பத்திரத்தில் (Affidavit) கொடுத்து முறைகேடுகள் செய்துள்ளனர். 6 பேர் பி.ஹெச்.டி, 22 பேர் முதுநிலைப் பட்டம், 5பேர் ஐ.டி,8 பேர் எம்.பி.பி.எஸ் டாக்டர், 40 பேர் வழக்கறிஞர் பட்டம்படித்திருப்பதாகவும், பொறியாளர்களாகவும் இருக்கிறார்கள் என்றெல்லாம் த.வெ.க.முதலில் பொதுவெளியில் வெளியிட்டது. ஆனால், இவர்களில் ஒன்பது பேருக்கு மேல் தங்கள் கல்வித் தகுதியைத் தவறான முறையில் உயர்த்தி மோசடி செய்து வெளியிட்டுள்ளதாக அச்சு, காட்சி ஊடகங்கள் வாயிலாகக் கடுமையான விமர்சனங்கள் செய்யப்பட்டுள்ளது. காலாந்தக ஜெகதீஸ்வரி, ஜெ. முகமது பர்வேஸ் தங்களுடைய பெயருக்கு முன்னால் டாக்டர் என்று பயன்படுத்தினார்கள் என்றும், இவர்கள் பி. எச் .டி. தகுதியில்லை என்றும் விமர்சனம் எழுந்துள்ளது.

அது போல் இராஜ்மோகன் தற்போது மந்திரி. உண்மைக்கு புறம்பான கல்வித் தகுதியைத் தங்கள் உறுதிமொழிப் பத்திரத்தில் வெளியிட்டுள்ளதாகக் கூறப்படும் விமர்சனங்கள் எழுகின்றன. மேலும், தஞ்சை தொகுதி விஜய சரவணன், விருதுநகர் எஸ்.பி செல்வம், தாம்பரம் டி. சரத்குமார், குமாரபாளையம் ஜி. விஜயலட்சுமி,கவுண்டம்பாளையம் கனிமொழி சந்தோஷ், ஆவடி ஆர்.இரமேஷ் குமார், அம்பத்தூர் பாலமுருகன், போளூர் அபிஷேக், இப்படியான நபர்கள் த.வெ.க.வின் சமூக வலைதளம் பதிவுகளில் உள்ள கல்வித் தகுதிக்கும், அவர்கள் தேர்தல் ஆணையத்தில் அளித்துள்ள உண்மையான உறுதிமொழிப் பத்திரத்திற்கும் (Affidavit) இடையே பெரிய முரண்பாடுகள் இருப்பதாக விமர்சன, சர்ச்சைகள்எழுந்து உள்ளன. இவர்களது கல்வித் தகுதி குறித்துத் தேர்தல் ஆணையம் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா? த.வெ.க தலைமை அல்லது அதன் தலைவர் ஜோசப் விஜய் இந்தச் சர்ச்சை குறித்து விளக்கம் கேட்டாரா? இந்த மோசடி அனைத்தும் உண்மையா? அல்லது பொய்யா? என்பது குறித்து இதற்குப் பதில் அளிக்க முன் வருவாரா?

*இதைப்போலத் தான் சட்டம் மற்றும் மின்சாரத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிற சி.டி. ஆர். நிர்மல் குமார் தனது கல்வித் தகுதியைத் தேர்தல் ஆணையத்தில் உறுதிமொழிப் பத்திரத்தில் (Affidavit)தாக்கல் செய்துள்ள பதிவுகளில் மோசடி என்றும் அது குறித்து உண்மையா? இல்லையா? என்றுபதில் சொல்ல முன்வருவாரா? என்று அச்சு, காட்சிஊடகங்களில் போன்றவற்றில் விமர்சனங்கள் எழுந்து வருகின்றன* .

*மதுரை மாவட்டம் உசிலம்பட்டியைச் சேர்ந்தவர் திருப்பரங்குன்றம் தொகுதியில் நின்ற போது, வேட்பு மனுவில் கல்வித் தகுதி குறித்து அளித்ததகவலின் படி, அவர் கணினி அறிவியல் (B.E.) ஆர்.எம்.கே. பொறியியல் கல்லூரி சென்னை அண்ணா பல்கலைக் கழகம் 2003 லும்; எல்.எல்.பி (L.L.B) சட்டப்படிப்பு விவேகானந்தா சட்டக் கல்லூரி பெங்களூரு பல்கலைக்கழகம் 2011 லும்; எம்.ஏ (குற்றவியல் மற்றும் போலீஸ் நிர்வாகம்) மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம் 2012 லும் படித்து முடித்ததாகக் கூறப்பட்டுள்ளது*.

அவர் படித்த L.L.Bபட்டம் முழு நேர படிப்பு குறித்த சர்ச்சையாகி உள்ளது. காரணம், அவர் முழு நேர படிப்பைத் கல்லூரி சென்று படிக்கவில்லை என்றும், தேர்வுகள் செமஸ்டர் காலங்களில் மட்டுமே கலந்து கொண்டு சட்டப்படிப்பு முடித்ததாகவும், முழு நேர சட்டப் படிப்புக்கான வருகை பதிவேடு (Attedance)அவரிடம் இல்லைஎன்றும்,பலதரப்பில்இருந்துவிமர்சனங்கள்முன்வைக்கப் படுகின்றன. அவரது அதிகாரப்பூர்வ சுயவிவரங்களின்படி (profile) அவர் சட்டப் பட்டம் பெற்றுள்ளார் எனினும், அவர் வழக்கமான முழு நேர (Regular full time)மாணவராக கல்லூரிக்கு சென்று படித்தார் என்பதற்கான பதிவுகள் இல்லை என்று சொல்லப்படுகிறது.

ஆகவே, எந்தக் கல்லூரியில் என்ன பெயரோடு படித்தார்? முழு நேரமா? பகுதி நேரமா? பகுதி நேரம் என்றால் வழக்கறிஞர் பட்டம் பெற முடியாது. பகுதி நேரம் என்றால்வழக்கறிஞர்கள் ஆயம்(Bar Council of IndiaB.C.I)அங்கீகாரம் உண்டா? பல்கலைக்கழகம் மான்யக் குழு அங்கீகாரம் உண்டா? மாநில ஒன்றிய அரசுகள் அனுமதி உண்டா? கொரோனா காலத்தில் இலண்டனில் வேலையெனில், அதே நேரத்தில் இந்தியாவில் சட்டம் படித்தது எப்படி? ஐ.டி கம்பெனியில் வேலை செய்து கொண்டே பெங்களூரில் எப்படிச் சட்டப் படிப்புப் படித்திருக்க முடியும்? இவற்றுக்கெல்லாம் நிர்மல் குமார் பொது மக்களுக்கு விளக்கம் தர கடமைப்பட்டவர். காரணம் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் அவர் அமைச்சர் பொறுப்பை வைத்து வருகிறார். அவர் வகித்து வரும் பதவி என்பது ஆதாயப் பதவியாகும் (Office of profit)அரசியலமைப்புச் சட்டப்படி தேர்தல் ஆணையத்தில் தந்த விவரங்கள் உண்மையா? இல்லையா? என்று அவர் தகுந்த ஆவணங்களோடு உண்மைக் தகவல்களை வெளியிட முன்வர வேண்டும்.

வெளிநாட்டில் வேலை செய்துகொண்டே இந்திய படிப்பு சாத்தியமாகுமா? தேர்தல் ஆணையத்திற்கு கொடுத்த தகவல்கள் உண்மையா?அபிடவிட்டில் மறைத்த தவறான தகவலா? இவர் பெற்ற பட்டம் படித்த கல்லூரி பொதுவாகவே ரெகுலர் கல்லூரி என்றால் B.C.Iஅங்கீகாரம் பெற்றதாகவும், மானிய குழு அனுமதி பெற்றதாகவும் இருந்தால் மட்டுமே எல்.எல்.பி ரெகுலர் கோர்ஸ் ஏற்கத்தக்கதாகும்.தவிரப் பகுதி நேரப் பரப்பு Distance Educationக்கு அங்கீகாரம் இல்லை. அவர் தந்துள்ள ஆண்டுகள் முரணாக உள்ளன. கொரோனா காலத்தில் இலண்டன் வளைகுடா வேலை. அதே நேரம் பெங்களூரில் என்றால், பிசிஐயின் 75 விழுக்காடு வருகை பதிவு என்பது சாத்தியமில்லை. இதற்கு ஆதாரம் வேண்டும் .

இலண்டனில் ஐ.டி அலு வலகத்தில் பணி செய்து, சம்ப ளம் வாங்கியபடியே அதுவும் பெங்களூருவில் எப்படிச் சட்டம் படித்து இருக்க முடியும்? ஒரு சாமானியக் குடிமகனாக உள்ள என் போன்ற மக்களுக்கு எங்கள் சட்ட அமைச்சர் என்ற முறையில் அவரது உண்மை யான கல்வித் தகுதியான சட்டப் படிப்பு பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது என்பது இந்திய குடிமக்கள் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களின் அவசியமும் கடமையுமாகும். அதற்கு அவர் பதில் சொல்ல வேண்டாமா? நீங்கள் அரசாங்கத்திற்கு மற்றும் தேர்தல் ஆணையத்திற்கும் வழங்கிய தகவல் அனைத்தும் உண்மையா? கல்வி தகுதியில் ஏதேனும் மாற்றம், மறைவு தவறாக உள்ளதா? மக்களை ஏமாற்றும் நோக்கம் இருந்ததாக இருந்தால், அதன் பின்னணி என்ன?

நீங்கள் தவறு செய்ததாகக் கருதினால், மோசடி குறித்துத் தேர்தல் ஆணையம் மனு Election petitionமக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் RP Act 1951 section 100 (1) (D) and section125 Aஎன்றும், வேட்பு மனு 26இல் தாங்கள் பொய்த் தகவல் கொடுத்ததாக தங்கள் மீது வழக்கு தாக்கல் செய்ய முடியும். அவர் வெற்றி பெற்றது செல்லாது என்று அவர் மீதுவழக்கு தாக்கல் செய்ய முடியும். அத்துடன் தலைமை தேர்தல் ஆணையம் தந்த அபிடவிட்டில் தவறான தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்று ஐபிசி 420 ஏமாற்றுதல், ஐ.பி.சி 199 பொய் சத்திய பிரமாணம் போன்ற பிரிவுகளில் புகார் செய்து நடவடிக்கை எடுக்க முடியும் என்பது அவருக்குத் தெரியுமா? தெரியாதா?அவர் தரும் விளக்கங்கள் ஆவணங்களோடு தரும் விளக்கங்கள் சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்ள முடியும். இல்லையெனில்,அவர் மோசடிக் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டவர் என்று பொருள் அல்லவா? இதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாடு ஆளுநர், நீதிமன்றங்கள் தான் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் கோயிலில் அதிகாரத்தைப் பயன்படுத்தி அமைச்சர் நிர்மல் குமார் வருகைக்காக, கோயில் நடைதாமதமாக அடைக்கப்பட்டது. அது தொடர்பான வீடியோ வெளியாகி உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நீதிபதிகள் அமர்வு கண்டனம் தெரிவித்து, "எம்.எல்.ஏ. அமைச்சர்களுக்காகக் கடவுள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை" என்று கூறி இந்து சமய அறநிலையத்துறை விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது.

அவர் வகிக்கும் சட்டத்துறையில் அரசு *வழக்கறிஞர்கள் நியமனத்திற்கு லஞ்சம் வாங்கப்பட்டதாக தன்னிடம் ஆதாரங்கள் இருப்பதாகவும் அதை விரைவில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க போவதாகவும் உயர், உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் இராஜாராமன் என்பவர் கூறியுள்ளார். அதைப்போலஅமைச்சரின் பரிந்துரையின் பேரில் ரூபாய் 30 இலட்சம் வரை இலஞ்சம் கேட்கப்படுவதாகக் குற்றம் சாற்றி த.வெ.க வின் விழுப்புரம் வழக்கறிஞர் எம். ஞானசவுந்தரி என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் கொடுத்துள்ளார். அண்மையில் இதே அரசு வழக்கறிஞர் பதவி வாங்கித் தருவதாகக் கூறி அவருடைய கட்சியைச் சேர்ந்த கன்னியாகுமரி மாவட்ட த.வெ.க செயற்குழு உறுப்பினர் அனீஸ் என்பவர் ரூபாய் 15 இலட்சம் இலஞ்சப் பேரம் நடத்தியதாகக் காணொளி வெளியிடப்பட்டுள்ளது.

அவருடைய துணைவியார் பல்லாவரம் மறைமலை அடிகள் மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்துவந்த கணித ஆசிரியர். கவுன்சிலிங் இல்லாத நேரத்தில் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி விதிகள் மீறித் திருவல்லிக்கேணியிலுள்ள லேடி வெலிங்டன் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் பணியிடம் மாற்றப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இப்படி விமர்சனங்கள் உள்ள நிர்மல் குமார் மீதும் அவரது கல்வித் தகுதி பற்றி அச்சு காட்சி ஊடகங்கள் சமூக வலைதளங்கள் மூலம் விமர்சனம் கலந்தகேள்விகள் எழுந்துள்ளன. அதற்கு எந்தவித பதிலும் இதுவரை நிர்மல் குமார் சொன்னதாகத் தகவல் இல்லை.

தொடக்கத்தில் பா.ஜ.க.வில் (2009-2023)ஊடகப் பிரிவில் இருந்து வந்த அவர்; பின்பு எடப்பாடி முன்னிலையில் அ.தி.மு.க.வில் சேர்ந்து ஊடகப் பிரிவில் இருந்து வந்தார் (2023 -2025). அதன் பின் த.வெ.க.வில் சேர்ந்து ஊடகப் பிரிவில் பணியாற்றி வந்த அவர், இன்றுஅமைச்சராகிப் பா.ஜ.க.வின் ஊன்றுகோலாகி ஊர்வலம் வருகிறார்.

**"ஒரு திறமையற்றவன் ஜொலித்தால்.. இப்படி எண்ணிக்கொள். (பேரும் புகழும் வரும் போது). "அடிக்கடி காற்றில் பறவையும் பறக்கும்; பேப்பரும் பறக்கும்!காற்று நின்றால் தான்... பறவை எது? பேப்பர் எது என்று தெரியும்?...." என்று கலைஞர் சொன்ன வைர மொழியை நாம் நினைவு கூர வேண்டி இருக்கிறது.**